வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.10.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 294 பக்கங்கள் : 08

# தமது அதிகாரத்தை பொலிஸார் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது

## பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்து



கொழும்பு, ஒக்ரோபர் 21

**"பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகபட்ச அதிகாரம் உள்ளது. ஆனால், அவர்கள் அதை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது", என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

குற்றச் செயல்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துகள் தொடர்பான விசாரணை பிரிவு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. பழைய பொலிஸ் தலைமையக கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பிரிவு நேற்று திங்கட்கிழமை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இதில், கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "சட்ட அமைப்பில் இவ்வளவு அதிகாரம் உள்ள சட்டம் எதுவும் இல்லை. பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகபட்ச அதிகாரம் உள்ளது. ஆனால், அவர்கள் அதை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. இந்த அதிகாரத்தை பொதுமக்களின் நன்மைக்காகவும் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யவும் பயன்படுத்த வேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, அங்கு உரையாற்றிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால,

"இது ஒரு தனித்துவமான சட்டமாக அடையாளம் காணப்படலாம். இதன்மூலம் சட்டத்தை விரைவாக செயல்படுத்த அனுமதிக்கிறது. இதற்கு தேவையான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இப்போது, புதிய சட்டங்கள் இல்லாவிட்டாலும், இந்த சட்டத்தின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப் பொருட்களை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

07

# வடக்கு மாகாண பாடசாலைகள் இன்று வழமைபோல் இயங்கும்

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாண பாடசாலைகள் இன்றைய தினம் வழமைபோன்று இயங்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

தீபாவளி பண்டிகையையொட்டி கிழக்கு, ஊவா, மத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு இன்றைய தினம் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், வடக்கு மாகாண பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி பலரிடத்தும் எழுந்தது.

07

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று முதல் கனமழை பெய்யும்

யாழ்ப்பாணம், ஒக். 21

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று நேற்று உருவாகியுள்ளது. இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு அடுத்த சில நாட்களுக்கு மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

07



# 26 இலட்சம் தீபங்களால் ஒளிர்ந்தது அயோத்தி!

## உலக சாதனையாக அங்கீகாரம்

அயோத்தி, ஒக். 21

தீபாவளி பண்டிகை தினமான நேற்றைய தினம் அயோத்தியின் சரயு நதிக் கரையில் 26 இலட்சம் தீபங்கள் ஏற்றப்பட்டன. இது கின்னஸ் உலக சாதனையாகவும் பதிவாகியுள்ளது.

தீபாவளி தினத்தன்று சரயு நதிக் கரையில் இலட்சக் கணக்கான தீபங்கள் ஏற்றி வழிபாடு நடத்துவது வழக்கம். இந்த அடிப்படையில், நேற்றைய தினம் 26 இலட்சம் தீபங்கள் ஏற்றப்பட்டன. உத்தரப்பிரதேச அரசின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இதில், பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்கள், 10 ஆயிரத்துக்கும் அதிகமான தன்னார்வலர்கள்

07

# நாடு முழுவதும் தீபாவளி கோலாகல கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை நேற்றைய தினம் இந்து தமிழ் மக்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

நரகாசூரன் எனும் அரக்கன் அழிந்த புராணக் கதையை முன்வைத்தும் ஒளியின் அடையாளமாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது.

தீபாவளி தினமான நேற்றைய நாளை மக்கள் பட்டாசு வெடித்து வரவேற்றனர். தொடர்ந்து, ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபங்கள் ஏற்றி வழிபட்டதுடன், பொது இடங்களில் கூடி

07



இந்து மக்களின் பண்டிகையான தீபாவளி தினமான நேற்று நல்லூர் ஆலயத்தில் வழிபாட்டுக்காக திரண்ட மக்கள்...!
(படம் - ஐ. சிவசாந்தன்)

# மழையால் ஒருவர் பலி!

## 512 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 21

நாட்டில் நிலவும் கனமழையுடன் கூடிய காலநிலையால் ஒருவர் உயிரிழந்தார். 123 குடும்பங்களை சேர்ந்த 585 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, வவுனியா மாவட்டத்தில் தாழ்நிலங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தில் கடும் மழையால் 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று

11

# ஐரோப்பா செல்லும் ஆசையாலேயே சஞ்சீவ கொலைக்கு உதவி செய்தேன்

## இஷாரா செவ்வந்தி வாக்குமூலம்

கொழும்பு, ஒக். 21

"எனக்கு ஐரோப்பா செல்ல ஆசை. பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கெஹெல்பத்தர பத்மே" என்பவர் என்னை ஐரோப்பாவுக்கு அனுப்புவதாக வாக்குறுதி அளித்தார். அதனால்தான் நான் பணம் பெற்றுக்கொள்ளாமல் "கணேமுல்லை சஞ்சீவ"வை கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்தேன்", - இவ்வாறு இஷாரா செவ்வந்தி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

அத்துடன், "நேபாளத்தில் தலைமறைவாக இருக்கும் போது ஐரோப்பா செல்வதற்காக போலி கடவுச்சீட்டு

07

# இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

## தீபாவளி தினத்தில் கொடூரம்

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

அக்கராயன் - ஈச்சங்குளத்தை சேர்ந்த கௌரிராஜன் கஜன் (வயது 24) என்ற ஒரு குழந்தையின் தந்தையே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

07

# நெகிழி பைகளுக்கு நவ.1 முதல் நுகர்வோரிடம் பணம் அறவீடு!

கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் நெகிழி பைகளுக்கு (சொப்பிங் பை) வாடிக்கையாளரிடமிருந்து வர்த்தகர்கள் பணம் அறவிட வேண்டும் என்று நுகர்வோர் விவகார ஆணையம் அறிவித்துள்ளது.

07

# யானை தாக்கி பெண் பலி!

மட்டக்களப்பு, ஒக். 21

காட்டு யானை தாக்கியதில் 4 பிள்ளைகளின் தாய் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.


மட்டக்களப்பு
- வவுணதீவு -

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.5 இலட்சம் போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் 23 வயது இளைஞர் கைது!



வவுனியா, ஒக். 21
வவுனியாவில் 3 இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவரை வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.


பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண விஜயமுனியின் ஆலோசனைப்படி, உப பொலிஸ் பரிசோதகர் விமல் பியரட்ண தலைமையிலான சந்தேகநபரை கைது செய்தனர்.

பொலிரோ வகை வாகனத்தில் கடத்தப்பட்ட இந்த போதை மாத்திரைகளை ஏ-9 வீதியில் இ. போ. ச. சாலைக்கு அண்மையாக மறித்து சோதனை நடத்தியதில் இந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

அந்த வாகனத்தில் 3 இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன், வாகனத்தை செலுத்தி வந்த 23 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் புத்தளம் - கற்பிட்டியை சேர்ந்தவர் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

(ஐ-10)



# ஐயனார் ஆலயத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், ஒக். 21
காங்கேசன்துறை ஐயனார் ஆலய வடக்கு வீதியில் பொது வழிபாட்டுக்கான சிவனின் சந்நிதானத்துக்கான குடமுழுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


பாஸ்கரன் காயத்திரியின் நிதி பங்களிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட இந்த சந்நிதானத்தில் கடந்த சனிக்கிழமை சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து, எண்ணெய் காப்பு நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று குடமுழுக்கு நடைபெற்றது. தொடர்ந்து, சிவலிங்கத்திற்கான அபிஷேக ஆராதனையும் நடைபெற்றது.

ஐயனார் ஆலயத்தின் அலங்கார திருவிழா நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் ஐயனார் ஐராவத யானை வாகனத்தில் எழுந்தருளி கடலில் தீர்த்தமாடி, பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

(ஐ-03)

# ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல்!




யாழ்ப்பாணம், ஒக். 21
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில், அதன் தலைவர் கு. செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிமலராஜனின் திருவுருவ படத்துக்கு குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன், ஊடகவியலாளர் பெடி கமகே ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர். தென்னிலங்கை ஊடகவியலாளர் அஜித் பொது சுடரேற்றியதை தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

போர் சூழலில் யாழில் இருந்து ஊடகப் பணியாற்றிய மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ், சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்றவற்றுக்கு செய்தியாளராக இருந்தார். 2000 ஒக்ரோபர் 19ஆம் திகதி ஊரடங்கு சட்டம் நடைமுறையிலிருந்த வேளை அவரின் இல்லத்தில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட கைக்குண்டு தாக்குதலில் நிமலராஜனின் தந்தை, தாய், மருமகன் ஆகியோர் படுகாயமடைந்திருந்தனர். இந்தக் கொலையின் சூத்திரதாரிகள் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# விவாதிகள் கழகம் அங்குரார்ப்பணம்!

கிளிநொச்சி, ஒக். 21
கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட விவாதிகள் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன் பங்கேற்றனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி வடக்கு வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் கலைச்செல்வி ஞானசேகரன், கிளிநொச்சி முருகானந்த கல்லூரி அதிபர் அரசரத்தினம் பங்கையற்செல்வன், சட்டத்தரணி, தனபாலசிங்கம் லக்சன் எழுத்தாளரும் ஆசிரியருமான தீபச்செல்வன், மூத்த படைப்பாளி ஏழுமலைப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-08)

# கேதார கௌரி விரத காப்பு பூசை இன்று

வடமராட்சி, ஒக். 21
கேதார கௌரி விரத காப்பு பூசை இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இந்த விரதம் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமானது.

பருத்தித்துறை சிவன் ஆலயத்தின் கௌரவிரத நிறைவு நாள் சிறப்பு பூசை காலை 9 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து, முற்பகல் 10.30 மணியளவில் காப்பு வழங்கப்படும். (ஐ-02)

• • •

யாழ்ப்பாணம், ஒக். 21
திருநெல்வேலி சிறீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் கௌரி விரதம சிறப்பு பூசை காலை 7.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து, கௌரிவிரத பூசை நடைபெற்று அதன் நிறைவில் காப்பு வழங்கப்படவுள்ளது.

(ஐ)

# விசுவமடு மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு!

முல்லைத்தீவு, ஒக். 21
விசுவமடுவை சேர்ந்த மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

விசுவமடு கிழக்கு அட்டைக்குளம் சிறுவர் பூங்காவில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே. கரிகாலனின் நெறிப்படுத்தலில் அன்பாலயம் அமைப்பின் நிதி அனுசரணையோடு 15 பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

விசுவமடு கிழக்கு, மேற்கை சேர்ந்த தூர இடங்களை சேர்ந்த மாணவர்களிடையே கல்வி கற்றலை ஊக்குவிக்கும் நோக்கிலேயே மாணவர்களுக்கு இவ்வாறு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலன், விசுவமடு ஆரம்ப பாடசாலை அதிபர் எஸ். யோகராசா, திட்ட இணைப்பாளர் தீ. அனுஸ்ரியா, மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# வழிபாட்டுக்கு சென்ற முதியவர் ஆலயத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 21
அராலி வீரபத்திரர் கோவில் மண்டபத்திலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அராலியைச் சேர்ந்த கணேசலிங்கம் (வயது 81) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

முதியவர் ஆலய வழிபாட்டுக்காக ஆலயத்துக்கு சென்ற நிலையில் ஆலய மண்டபத்தில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

இவரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

# அழிவின் விளிம்பிலுள்ள பாரம்பரிய கட்டடங்கள்

கொழும்பு, ஒக். 21
அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் குறித்த அரசாங்கத்தின் முடிவில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், முன்னர் அமைச்சர்களால் பயன்படுத்தப்பட்ட பாரம்பரியமிக்க கட்டடங்கள் பலவும் முறையான பராமரிப்பின்றிப் பாழடைந்து வருவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்குவது குறித்த அரசாங்கத்தின் முடிவெடுக்கும் தாமதத்தால், அந்தக் குடியிருப்புகள் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளன.

பெரும்பாலான உத்தியோகபூர்வ இல்லங்கள் பாரம்பரிய மதிப்புள்ள பழமையான கட்டடங்கள் ஆகும்.

அவை பராமரிப்பின்றி பூட்டப்பட்டு உள்ளதால், சிதைவடைந்து, பாழடைந்து வருகின்றன.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் பாரம்பரியக் கட்டடங்களுக்குச் செல்லாமல், முடிவெடுக்கத் தாமதிப்பதால், மதிப்புமிக்க மரபுக் கட்டடங்கள் சீரழிவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவை கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால், அவற்றில் இருந்த மதிப்புமிக்க தளபாடங்கள் மற்றும் உடைமைகள் பற்றிய உத்தியோகபூர்வ ஆவணப்படுத்தல் பணிகள் நடைபெற்ற பின்னரும், கட்டடங்களின் தினசரி பராமரிப்பு தடைப்பட்டுள்ளது.

முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தால், கூரைகள், கதவுகள், ஜன்னல்கள் போன்ற முக்கிய பாகங்கள் சேதமடைவதுடன், பெருமளவு மரபுக் கட்டடங்கள் சிதைவடையத் தொடங்கியுள்ளன.

தேர்தலில் வெற்றியீட்டி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைந்த பின்னர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்துவது குறித்து, புதிய அரசாங்கம் ஒரு கொள்கை முடிவை எடுக்க வேண்டியுள்ளது.

இந்த முடிவில் ஏற்பட்டுள்ள தாமதமே, பாரம்பரியமிக்கக் கட்டடங்களின் இன்றைய நிலைக்குக் காரணம் என்று குறித்த கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.10.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## நீதி கோருதல்

இலங்கையில் நீதி கோருபவர்களும் அதற்கான கோரிக்கைகளும் பல தளங்களில் இருக்கின்றன. இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்ட விடயங்கள் என்பது பிரதானமானது. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதினாறு வருடங்கள் இந்த அடிப்படையில்தான் கடத்தப்பட்டது. ஆனால், நீதி நிலைநாட்டப்படவில்லை ஆகக் குறைந்தது நீதி நிலைநாட்டப்படும் என்பதற்கான சிறிய நம்பிக்கை கூடத் தென்படவில்லை.

இந்தக் காலத்தில் இலங்கைத் தீவை மாறி, மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்துமே உள்ளக பொறிமுறையின் மூலம் தீர்வை காண்பதாக கூறியது போலவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் உள்ளக பொறிமுறை தொடர்பிலேயே பேசிவருகின்றது. ஆனால், அவ்வாறானதொரு விசாரணை இலங்கைத் தீவில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றதா - அவ்வாறில்லாவிட்டால் வெளியகத் தலையீடுகளுக்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்னும் கேள்வியுடன் தான் கடந்த பதினாறு வருட காலம் கழிந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வழிநடத்தும் ஜே.வி.பியின் ஆயுதப் புரட்சி நடவடிக்கைகளின்போது, பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களுக்கான நீதியை ஆட்சியிலிருக்கும் ஜே.வி.பியால் உறுதிப்படுத்த முடியுமா? பட்டலந்த படுகொலைகள் தொடர்பில் பேசப்பட்டது. ஆனால், அதற்கான விசாரணைகளை முன்னெடுக்க முடியவில்லை. ஏனெனில் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான கோப்புக்களை புரட்ட முற்பட்டால் அதிலும் ஜே.வி.பியின் கடந்த காலமும் உள்ளடங்கயிருக்கும். அது தொடர்பான கேள்விகளுக்கு யார் பதிலளிப்பது. மேலும் படுகொலைகளுக்காக எவரையேனும் தண்டிக்க வேண்டும் என்றால் அரசைத்தான் தண்டிக்க வேண்டும். ஆனால், இப்போது இந்த அரசே ஜே.வி.பி தான். இந்த முரண்பாடான அரசியலை புரிந்து கொண்டதாலோ என்னவோ, பட்டலந்த பேசப்பட்ட வேகத்திலேயே காணமால் போய்விட்டது.

இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பில் எவ்வித முன்னேற்றத்தையும் பதிவு செய்ய முடியாமல் போயிருக்கும் நிலையில் பிராந்திய சக்தியான இந்தியா, வல்வை படுகொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும், நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரப்படுகின்றது. அது தொடர்பில் எவ்வித கேள்வியுமின்றி தமிழ் அரசியல்வாதிகளும் ஆமாம் போடுபவர்களாக இருக்கின்றனர். வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே தமிழ் அரசியல்வாதிகள் செயல்படுகின்றனர். ஒரு புறம், அரசியல் தீர்விற்காக இந்தியாவின் தயவை நாடும் தமிழ் அரசியல் தலைமைகள் மறுபுறம் இந்தியாவை பொறுப்புக் கூறுமாறு கோர முடியுமா? இது என்ன வகையான அரசியல்?

இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பில் பேசுகின்றபோது அந்தப் பொறுப்புக் கூறலை திசைதிருப்பும் நோக்கில் வேறு விடயங்களை இடைச் செருகல்களாக கொண்டுவருவதானது, அடிப்படையான நிலைப்பாடுகளை பலவீனப்படுத்தவே பயன்படும். இவை அனைத்தும் அரசியல்வாதிகளின் இயலாமையிலிருந்தும், செயற்திறனிலிருந்தும்தான் ஏற்படுகின்றது. வழிகாட்ட வேண்டிய தலைமைகள் இழுபட்டுச் செல்வதால் அனைவருமே தலைவர்களாகிவிடக் கூடிய ஓர் அரசியல் சூழலே, தமிழர் அரசியலை ஆக்கிரமித்திருக்கின்றது. தமிழர் அரசியல் முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்றால், முதலில் இந்த விலங்கிலிருந்து விடுபட வேண்டும்.

# கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான புதிய பாடத் திட்டங்கள் விரைவில்!

கொழும்பு, ஒக். 21

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முதலாம் மற்றும் ஆறாம் தரங்களுக்கான பாடத்திட்டம் விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனுடன் தொடர்புடைய ஆசிரியர் வழிகாட்டி கையேடுகள் மற்றும் கால அட்டவணைகளை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித் தார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் இதுவரை எந்தவொரு தரத்திற்கும் உத்தியோகபூர்வமாக பாடத் திட்டங்கள், ஆசிரியர் வழிகாட்டி கையேடுகள் அல்லது கால அட்டவணைகள் வெளியிடப்படவில்லை என அவர் கூறினார்.

2026 ஆம் ஆண்டு முதல் முதலாம் மற்றும் ஆறாம் தரங்களுக்கு புதிய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப பாடசாலை நடைபெறும் நேரத்தையும் திருத்தியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், முதலாம் மற்றும் ஆறாம் தரங்களுக்கு அடுத்த ஆண்டு முதல் பாடப்புத்தகங்கள் வழங்கப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன குறிப்பிட்டார். (அ)

# ஏற்றுமதிச் சந்தையை நோக்கி நாட்டின் இயற்கை விவசாயம்!

கொழும்பு, ஒக். 21

ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த இலங்கை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் மேலும் நிலைத்தன்மை தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ள நிலையில், இந்த முடிவை இலங்கை எடுத்துள்ளது.

உலகளாவிய நிலையான வளர்ச்சி நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாக, விவசாய பொருட்களை தமது சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் மற்றும் தனியார், நிலைத்தன்மை தரநிலைகளுக்கு இணங்க வேண்டும் என்று கோரும் புதிய சட்டங்களை - ஐரோப்பிய ஒன்றியம் அமுல்படுத்த தயாராகி வருகிறது.

இந்த சட்டங்கள் நடைமுறைக்கு வந்தவுடன், இலங்கை போன்ற நாடுகள் தங்கள் சந்தை அணுகலைப் பராமரிக்கவும் விரிவுபடுத்தவும் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே அதிகம் நம்பியிருக்க நிலை ஏற்படும்.

இலங்கையில் தற்போது சுமார் 20,000 விவசாயிகள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக சுமார் 70,000 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் பயிர்செய்கையை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மதுவரித் திணைக்கள அலுவலர்களில் 20 முதல் 30 வீதமானோர் மோசடியாளர்!

கொழும்பு, ஒக். 21

மதுவரி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களில் 20 முதல் 30 வீதமானோர் மோசடியாளர்கள் என இலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர் என்.எச்.பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், கடந்த காலங்களில் எவ்வாறு செயற்பட்டார்களோ அவ்வாறே தற்போதும் செயற்பட்டுவரும் நிலையில், குறித்த பழைமையான பழக்கத்தை அவர்கள் மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.


அகில இலங்கை மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 74ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

நாட்டின் தேசிய பொருளாதாரம் மற்றும் அரச வருமானத்தை ஈட்டித்தரும் துறைகளில் மதுவரித் திணைக்களம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பாண்டில் 242 மில்லியன் ரூபாய் என்ற இலாப இலக்கை மதுவரித் திணைக்களம் அடைந்துள்ளதாகவும், இந்த இலாபத்தை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபான உற்பத்திகளை தடுப்பது மற்றும் அனுமதி பெற்ற மதுபான நிலையங்களிடம் இருந்து வரிகளை பெறுவது திணைக்களத்தின் பிரதான பணி என்றும் இலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர் என்.எச்.பிரேமரத்ன சுட்டிக்காட்டினார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**

அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். தொட்டது துலங்கும்.

**இடபம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**

இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச் சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். விழிப்புணர்வு தேவைப்படும்.

**விருட்சிகம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உங்கள் கை ஓங்கும்.

**தனுசு**

அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். கணுக்கால் வலிக்கும். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். நம்பிக்கையை பெறுவீர்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**மீனம்**

உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உங்களை நம்பி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

# யாழ்ப்பாணத்தில் தீபாவளி இலக்கிய கூடல்

யாழ்ப்பாணம், ஒக். 21

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் தீபாவளி இலக்கிய கூடல் நிகழ்வு அமைச்சர் ஹினிதும சுனில் செனவியின் பங்குபற்றுதலுடன் கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இதில், புத்தக கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி ஆற்றிய அரச இலக்கிய பேருரையின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் வெளியீடும் நடைபெற்றது.

தொடர்ந்து கலைஞர்களுக்கான அடையாள அட்டைகளை அமைச்சர் மற்றும் இலக்கிய குழுவினர் வழங்கி வைத்தனர். அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் மற்றும் இலக்கிய குழுவினர் ஆகியோர் பிரதேச நூலகங்களுக்கான நூல் தொகுதிகளை வழங்கி



வைத்தனர். தொடர்ந்து வடக்கு, தெற்கு கலைஞர்களுடனான சினேகபூர்வ கலந்துரையாடல் மற்றும் நடனநிகழ்வுகளும் நடைபெற்றன.

அமைச்சர் ஹினிதும சுனில் செனவி கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் மாவட்டம்

சிறந்த பாரம்பரிய விடயங்களை கொண்ட இடம். அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு பெருமளவு தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச திரைப்பட விழா இவ்வருடம் நடைபெறவுள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் சர்வதேச மட்டத்திலான மொழிபெயர்ப்பு நிறுவனத்தை உருவாக்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பல இலக்கிய படைப்புக்களின் மொழிபெயர்ப்பு மக்களுக்கு கிடைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைக்கு தீர்வுகாண நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

கடற்றொழிலாளர்கள் மற்றும் கடலட்டை பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வு காணுதல் தொடர்பான கலந்துரையாடல் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் வரவேற்புரையாற்றுகையில், கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் தீர்வுகளை காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடி பிரதானமானவை. தேசிய வருமானமானத்தை ஈட்டும் தொழிலாக கடற்றொழில் காணப்படுகிறது. கடற்றொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். பிரதேச மட்டத்தில் காணப்படும் பிரச்னைகள், மாவட்ட மட்டத்தில் காணப்படும் பிரச்னைகள், தேசிய ரீதியாக காணப்படும் பிரச்னைகள் என மூன்று கோணங்களில் ஆராயப்பட வேண்டும்- என்றார். (எ)

# சங்கிலி அறுத்த சந்தேகநபர் 24 மணிநேரத்துக்குள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 21

பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலியை அறுத்த சந்தேகநபரை 24 மணி நேரத்துக்குள் சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் பலாலி வீதியில் நடந்து சென்ற பெண் ஒருவரின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர் அறுத்துச் சென்றுள்ளார்.

இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. விசாரணைகளின் அடிப்படையில் சம்பவம் இடம்பெற்று 24 மணிநேரத்துக்குள் அளவெட்டியை சேர்ந்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. விசாரணையில் அறுத்த சங்கிலியை சந்தேகநபர் அடகு வைத்து பணம் பெற்றமையும் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்து வருகின்றனர். (ஜ-05)

# முறையற்று பணம் சேகரித்த பொலிஸாருக்கு இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஒக். 21

சட்டவிரோதமாக பணம் சேகரித்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இருவரும் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் சட்டவிரோதமாக ஈட்டிய பணம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-05)

# விபத்தை ஏற்படுத்தும் வகையில் பயணித்த பேருந்தால் அச்சம்!

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி நேற்று முன்தினம் சென்ற பேருந்து ஒன்று ஆபத்தான முறையில் பயணித்ததால் பேருந்தில் பயணித்தவர்களும் வீதியில் பயணித்தவர்களும் அச்சத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த பேருந்து புதுக்காட்டுக்கும் பளைக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதிச் சமிக்ஞைகளை பின்பற்றாது, மிகவும் வேகமாக பயணித்தது. இதன் போது அபாயகரமான திருப்பத்தில் சென்ற இரண்டு கார்களை முந்திச் சென்றது.

குறித்த திருப்பத்தில் தொடர் வெள்ளைக்கோடு காணப்படும் நிலையில் அதனை பொருட்படுத்தாமல் மிகவும் வேகமாக அந்தப் பேருந்து முழுமையாக வலது பக்கத்தால் முந்திச் சென்றது.

அண்மைக்காலமாக இடம்பெறும் வீதி விபத்துகளால் பல மரணங்கள், அங்கவீனங்கள் மற்றும் பொருட் சேதங்கள் ஏற்படுகின்றமை தொடர் கதையாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிக்காத 2 ஆயிரம் வேட்பாளர்கள் மீது வழக்குகள்!

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு பொலிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

**2023 ஆம் ஆண்டில் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்துக்கமைய, தமது செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறிய 2,000 இற்கும் அண்மித்த வேட்பாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்.**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

வழக்குத் தொடரப்பட்டவர்களில், 2024 ஆம் ஆண்டும் செப்ரெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 13 பேரும், நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 1,700 இற்கும் மேற்பட்டோரும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்கள் ஒரு தொகுதியினரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத பெருமளவிலான வேட்பாளர்கள் மீதான வழக்கு தொடரும் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை என்றும் பொலிஸார் தகவல் அளித்துள்ளதாகத் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டின் இலக்கம் 3 தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ், போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தமது செலவு விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த சட்டத்தின் கீழ் நடைபெற்ற முதலாவது தேர்தல் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலாகும்.

சட்டத்தின்படி, ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் நிறைவடைந்த 21 நாட்களுக்குள் தமது செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட 5 நாட்களுக்குப் பிறகு, ஒரு வாக்காளருக்காக ஒவ்வொரு வேட்பாளரும் செலவிடக்கூடிய அதிகபட்ச செலவு வரம்பை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்து அறிவிக்கவேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சில மாவட்டங்களுக்கு ஒருநாள் சேவை சாரதி அனுமதி பத்திரம் அச்சிட திட்டம்

கொழும்பு, ஒக். 21

அடுத்த ஆண்டு முதல் குருநாகல், பதுளை மற்றும் அம்பாறை மாவட்ட அலுவலகங்கள் மூலம் ஒரு நாள் சேவையின் கீழ் சாரதி அனுமதி பத்திரம் அச்சிட திட்டமிடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஒரு நாள் சேவை தற்போது வேரஹெர மற்றும் அம்பாந்தோட்டை அலுவலகங்கள் மூலம் மட்டுமே வழங்கப்படுகின்றது.

மேலும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் வேரஹெர டிஜிற்றல் அமைப்புடன் 12 மாவட்ட அலுவலகங்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 13 மாவட்ட அலுவலகங்களும் இந்த அமைப்புடன் இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

# வாகன முன்பதிவுகள் உயர்வு

கொழும்பு, ஒக். 21

இலங்கையின் வாகன முன்பதிவுகள் கடந்த மாதத்தில் உயர்வை, பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பைத் தளமாகக் கொண்ட தனியார் நிறுவனமொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் செப்ரெம்பர் மாதம், வாகன முன்பதிவுகள் 27 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தண்ணீர் தொட்டியில் விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 21

புத்தளம், முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்துலுஓயா பகுதியிலுள்ள இறால் பண்ணையொன்றின் தண்ணீர் தொட்டியில் விழுந்து 24 வயதான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் முதற்கட்ட விசாரணையில் குறித்த இளைஞனுக்கு ஏற்பட்ட வலிப்பின் காரணமாக தண்ணீர் தொட்டியில் விழுந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 11 மாவட்டங்களில் மீண்டும் டெங்குப் பரவல் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 21

நாட்டில் தற்போது 11 மாவட்டங்களில் டெங்கு பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாகவே டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளதாக அந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

நடப்பாண்டில், இதுவரையான காலப்பகுதியில் 40,392 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். 22 பேர் உயிரிழந்தனர்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, டெங்கு நுளம்புகள் பரவுவதைக் கட்டுப்படுத்த சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

ஐ.ம.ச - ஐ.தே.க. பேச்சுவார்த்தை;

# சஜித் தரப்பு குழு அறிக்கை நாளை கட்சி முகாமைக்கு!

கொழும்பு, ஒக். 21

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து செயலாற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கான பரிந்துரைகளை தயார் செய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நாளை புதன்கிழமை கட்சி முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் குழு உறுப்பினர்களாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த விடயம் தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றிணைவுக்காக இருத் தரப்பிலும் நியமிக்கப்பட்டுள்ள குழுக்களுக்கிடையில் இன்னும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகவில்லை. இருந்தபோதும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் நாங்கள் நியமித்த குழுவின் அறிக்கை எதிர்வரும் புதன்கிழமை அதாவது நாளை மறுதினம் கட்சி முகாமைத்துவ குழுவுக்கு ஒப்படைப்போம். பேச்சுவார்த்தை சாதகமாக அமையும் என்றே நம்புகிறோம்-என்றார்.

இதேவேளை, இந்த இருத்தரப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மூன்று பேர் கொண்ட குழுவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி தலதா அத்துக்கோரள மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா ஆகியோர் இந்த மூன்று பேர் கொண்ட குழுவில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# புதிய வாகனங்களுக்கு இலக்கத்தகடு; 3 மாதங்களுக்கு காத்திருக்கவேண்டும்

கொழும்பு, ஒக். 21

நாட்டில் 5 மாதங்களாக வாகன இலக்கத் தகடுகள் இல்லாமல் காத்திருக்கும் 165,000 புதிய வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகன இலக்க தகடுகளைப் பெற இன்னும் மூன்று மாதங்கள் காத்திருக்கவேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டமை, புதிய விலை மனு கோரல் செயல்முறை தொடர்பான சிக்கல்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களைச் சரிபார்ப்பதில் ஏற்பட்ட தாமதம் போன்றனவே இதற்குக் காரணங்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் துறையில் பதிவுசெய்யப்பட்ட 127,745 உந்துருளிகள் மற்றும் 25,526 மின்சார சிற்றுந்துகள் உட்படக் கணிசமான எண்ணிக்கையிலான வாகனங்கள், வாகன இலக்கத் தகடுகளைப் பெறக் காத்திருக்கின்றன.

கடந்த ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதம் நிறைவடைந்ததுடன், மேலும் மாற்று ஒப்பந்தக்காரர் இல்லாததால் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வாகன இலக்க தகடுகளை வழங்குவதை நிறுத்த வேண்டியிருந்தது.

விலை மனு கோரல் செயல்பாட்டில் தொழில்நுட்ப மற்றும் கொள்முதல் சிக்கல்கள் காரணமாக புதிய ஒப்பந்தக்காரரைக் கண்டுபிடிக்கும் செயல்முறை தாமதமாகியுள்ளது.

புதிய இலக்கத் தகட்டில் 7 சிறப்பு பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன.

மேலும் அவற்றைச் சோதிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களே இலக்க தகடுகளை வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்துக்கு முக்கிய காரணம் என்றும் கூறப்படுகிறது.

# மருந்து விலை ஒழுங்குபடுத்தல் விரைவில் நடைமுறைக்கு வரும்?

கொழும்பு, ஒக். 21

மருந்துப் பொருட்களுக்கான விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான யோசனைகளை எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விதிமுறைகள் அடங்கிய புதிய வர்த்தமானி அறிவிப்பு, சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுவினால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் ஆலோசனைக் குழு கூடியபோது, தேசிய ஔடத ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்தின்படி மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்த அதிகாரம் அதிகாரசபைக்கு இருப்பதாக, ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக் காட்டினார்.

எனினும் இது தொடர்பான புதிய வர்த்தமானிகள் 2017, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டாலும், இதுவரை நடைமுறைப்படுத் தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டது.

குறித்த புதிய வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் பாராளுமன்ற அமர்வில் விவா திப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# வில்பத்து பூங்காவில் சிக்கிய 30 சுற்றுலாப் பயணிகள் மீட்பு

கொழும்பு, ஒக். 21

பலத்த மழை மற்றும் ராஜாங்கனை நீர்த்தேக்க பெருக்கெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, வில்பத்து தேசியப் பூங்காவின் எளுவன்குளம் நுழைவாயில் 6 அடிக்கும் மேலான வெள்ளத்தில் மூழ்கியது.

இதனால், பூங்காவுக்குள் சென்ற உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என சுமார் 30 பேர் வீதிகள் சேதமடைந்து வெளியேற முடியாமல் சிக்கியிருந்தனர்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சபாரி வாகனங்களின் துரித நடவடிக்கை யின் மூலம் அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு, விடுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கலா ஓயாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால், எளுவன்குளம் நுழைவாயில் வீதி மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பொய் வாக்குறுதிகள் வேண்டாம்" முத்துநகர் விவசாயிகள் போராட்டம்

திருகோணமலை, ஒக். 21

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் 34 ஆவது நாளாக வும் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இத்தருணத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவால் தீர்வுக்காக வழங் கப்பட்ட இரண்டாவது கால அவகாசத்தின் படி இறுதி நாள் எனவும் குறித்த விவசாயிகள் தெரிவித்தனர்.

தங்களது விவசாய நிலத்தை அபகரித்து தனியார் கம்பனிக ளுக்காக சூரிய மின் சக்தி உற்பத் திக்கு வழங்கப்பட்டதை கண் டித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

"வேண்டாம் வேண்டாம் பொய் வாக்குறுதி" எனும் பிர தான சுலோக அட்டையை காட் சிப்படுத்தியவாறு முத்துநகர் விவசாயிகள் தீர்வு வேண்டி போராடி வருகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக



விவசாயம் செய்து வந்த காணியை அபகரித்ததால் சுமார் 352 ஏழை விவசாய குடும்பங்கள் நடுத்தெரு வில் இறக்கப்பட்டுள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் ஆளும் தரப்பு மீது விவசாயிகள் நம்பிக் கையிழந்த நிலையில் பெரும் மன உளைச்சலுக்குள்ளாகி அன் றாட ஜீவனோபாயம் இழந்த நிலையில் தொடர் சத்தியாக்கி ரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலை சீனக்குடா விமான நிலையத்துக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநா யக்கவை குறித்த விவசாயிகள் பேரணியாக சென்று சந்திக்க முயற்சித்த நிலையில் அது சாத்தி யப்படவில்லை.

தங்களுக்கான நிரந்தர தீர்வை விரைவாக வழங்குமாறு பிரத மர் மற்றும் ஜனாதிபதியிடம் முத்துநகர் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 21

நாட்டில் 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதன்படி, கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 6 பிரதேச செயலாளர் பிரிவுக ளுக்கு இரண்டு கட்டங்களின் கீழ் மண்சரிவு எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் யட் டிநுவர மற்றும் உடுதும்பர பிர தேச செயலாளர் பிரிவுகளுக் கும் கேகாலை மாவட்டத்தில் மாவனெல்லை, யட்டியந் தோட்டை, கேகாலை, அரநா யக்க மற்றும் திஹிரியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக் கும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதேவேளை, பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்ல, பசறை, கொழும்பு மாவட்டத் தில் சீதாவக்க, காலி மாவட்டத் தில் நாகொட, நெலுவ மற்றும் எல்பிட்டிய, கண்டி மாவட்டத் தில் உடுநுவர, தெல்தோட்டை, உடபலாத, தொலுவ, பஹததும் பர பஹத்தஹேவாஹெட்ட மற்றும் கங்க இஹலகோரல ஆகிய பிரதேச செயலக பிரிவுக ளுக்கும் முதல் கட்டத்தின் கீழ் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதேநேரம், நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, அம்பகமுவ, நோர்வூட் மற்றும் ஹங்குரன்கெத்த மற்றும் இரத் தினபுரி மாவட்டத்தில் கலவானை, இம்புல்பே, இரத்தி னபுரி மற்றும் எஹலியகொட ஆகிய பிரதேச செயலாளர் பிரி வுகளுக்கும் மண்சரிவு எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(எ)

# காரைதீவுக்குள் புகுந்து காட்டு யானை அட்டகாசம்

காரைதீவு, ஒக். 21

நடுநிசி வேளையில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானை அந்த பிரதேசத்தை துவம்சம் செய்து வெளியேறியது. மக்கள் விடிய விடிய பீதியுடன் அல்லோல கல்லோலப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீ வுக் கிராமத்தில் நேற்று முன்தி னம் ஞாயிற்றுக்கிழமை அதி காலை 1.15 மணியளவில் இடம் பெற்றது.

காரைதீவு மேற்கே உள்ள வயல் பகுதியில் இருந்து திடீ ரென உள்நுழைந்த தனியன் யானை, கண்ணகி அம்மன் ஆலய வளவுக்குள் புகுந்து பின் மதிலை உடைத்துக் கொண்டு ஊர்மனைக்குள் புகுந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மக்களின் ஐந்து வீடுகளின் எல்லை மதில்களை உடைத்து சந்திரகு மார் என்பவரின் களஞ்சிய அறை யிலிருந்த நெல்லை உறிஞ்சிக் குடித்தது.

அப்பகுதியில் இருந்த வாழை, தென்னை, மரவள்ளி போன்ற வற்றை சரித்து உண்டு துவம்சம் செய்தது.


மக்கள் செய்வதறியாது உயிரை கையில் பிடித்துக் கொண்டு நடு நிசியில் ஓட்டம் பிடித்தனர்.

அந்தப் பிரதேசமே நடுநிசி யில் அல்லோல கல்லோலப் பட்டது. நாய்கள், குரைக்க யானை மதம் பிடித்து ஓடத் தொடங்கியது. இதனால், நிலைமை மோசமாகியது. அந்த யானை தொடர்ந்து வளவுகளுக் குள்ளால் மதிலை உடைத்துக் கொண்டு சென்று மீண்டும் வயலை சென்றடைந்தது.

மக்கள் விடிய விடிய பீதியு டன் பொழுதை கழிக்க நேர்ந் தது. தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏற்படவில்லை.

பெரும் சேதத்தை எதிர் கொண்ட சந்திரகுமார் கூறுகை யில், நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபொழுது திடீரென பாரிய சத்தம் கேட்டது. புயல் அடிக் குதோ என் நினைத்து எழுந்து பார்த்த போது பெரும் கரிய உருவத்துடன் யானை ஒன்று நின்றது.

இப்படி அது சேதம் விளை விக்கும் என்று எதிர்பார்க்க வில்லை பீதி கொண்டு ஓடினோம் இந்த சேதத்துக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். மற்றும் யானை வராமல் மக்களை பாது காக்க வேண்டும். உரிய அதிகா ரிகள் விரைந்து செயல்பட வேண் டும். இல்லாவிட்டால் பல உயிர் களை இழக்க வேண்டி நேரிடும் -என்றார். (எ-08)



# திருமண நிகழ்வுக்கு சென்ற கார் விபத்து, தம்பதி காயம்

மூதூர், ஒக். 21

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆசாத்நகர் பகுதியில் கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த தம்பதியினர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

திருகோணமலை - மட்டக் களப்பு பிரதான வீதியின் ஆசாத் நகர் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது.

திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அக்க ரைப்பற்றிலிருந்து திருகோண மலை நோக்கிப் பயணித்த கார், வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதி தடம்பு ரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது காரில் இருந்த எயார்பேக் வெளிவந்ததால் காரில் பயணித்த தம்பதியினர் இருவரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

சாரதியின் தூக்கமே விபத் துக்கு காரணமென தெரியவ ருகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (எ)

# "அரசின் புதிய கல்வி சீர்திருத்தம் நல்லிணக்கத்துக்கு அடித்தளமாகும்"

சாய்ந்தமருது, ஒக். 21

அரசின் புதிய கல்விச் சீர்தி ருத்தம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் தேசிய நல் லிணக்கத்துக்கும் அடித்தளமாக அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அ. ஆதம்பாவா தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான ஐந் தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு களைப் பெற்ற 28 மாணவர்களை கௌரவிக்கும் வகையில் அம் பாறை, சாய்ந்தமருது அரச முஸ் லிம் கலவன் பாடசாலையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"புதிய கல்விச் சீர்திருத்தம் நாட்டின் பொருளாதார முன் னேற்றத்துக்கும் தேசிய நல்லி ணக்கத்துக்கும் அடித்தளமாக அமையும். கல்வி மூலமாகவே ஒரு சமுதாயத்தை மாற்ற முடி யும். அரசாங்கம் மாபியாக்கள் இல்லாத, சமநீதி நிலவும், கல்வி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி பயணிக்கிறது.

மாணவர்களின் தன்னம் பிக்கை, ஆர்வம் மற்றும் பெற் றோரின் பங்களிப்பு ஆகியவை பாடசாலையின் வளர்ச்சிக்கு காரணமாக உள்ளன. பெற்றோர் வழங்கிய நன்கொடைகளால் பாடசாலைக்கு பல்வேறு வசதி கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது பெருமைக்குரியது" - என்றார். (எ-06)

# மழை காலத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

கல்முனை, ஒக். 21

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை காலத்தில் டெங்கு நுளம்பு பெருக்கம் ஏற்பட்டு டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளதனால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டத்தை அம்பாறை, கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவு முன்னெ டுத்துள்ளது.

அந்த வகையில் கல்முனை பிராந்திய டெங்கு கட்டுப் பாட்டு நடவடிக்கைகள் தொடர் பில் ஆராயும் விசேட கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடை பெற்றது.

பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளரின் ஆலோசனை வழிகாட்டலில் பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். எச். றிஸ்பின் தலைமையில் நடை பெற்ற இந்தக் கூட்டத்தில் பிராந் திய கண்காணிப்பு மற்றும் மதிப் பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம். மாஹிர், சுகாதார வைத்திய அதி காரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந் தியத்தில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளி லும் மேற்கொள்ளப்படும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்பிலும் ஆராயப்பட்ட துடன் எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் முன் னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் சம்மந்தமாகவும் கலந்துரையாடப்பட்டன. (எ-06)

# பேருந்துகளில் அதிக கட்டணம் அறவிடுவதை கண்டறிய சோதனை

ஹற்றன், ஒக். 21

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, கொழும்பிலிருந்து ஹற்றன் மற்றும் ஹற்றனில் இருந்து குறுகிய தூரத்துக்குச் செல்லும் தனியார் பேருந்துக ளில் அதிக கட்டணம் அறவிடு வதை கண்டறிவதற்காக மத்திய மாகாண போக்குவரத்து சேவை கள் சோதனைப் பிரிவின் அதிகா ரிகளால் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் - கொழும்பு பிர தான வீதியில் உள்ள வட்டவ ளைப் பகுதியில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

இதில் அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக கட்டணம் வசூலித்து பயணி களை ஏற்றிச் சென்றது, நடத்து நர் உரிமம் இல்லாமல் பேருந்து களில் பயணிப்பவர்களிடமி ருந்து பணம் பெற்றது, பயணி கள் அனுமதிச் சீட்டு இல்லா மல் பேருந்துகளை இயக்கியது, பயணிகள் போக்குவரத்து அனு மதிச் சீட்டில் குறிப்பிடப்பட் டுள்ள பாதைக்கு மாறாக வேறு பாதைகளில் பேருந்துகளை இயக்கியது ஆகிய குற்றச்சாட் டுகளுக்காக பல சாரதிகள் மற் றும் நடத்துநர்களிடமிருந்து 207,000 ரூபாய் அபராதம் வசூ லிக்கப்பட்டதாக என மத்திய மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் சோதனைப் பிரிவின் தலைமை ஆய்வாளர் டி.பி. விஜேசிங்க தெரிவித்தார்.

பயணிகளிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுவதா கவும் தீபாவளி பண்டிகை முடி யும் வரை இந்த சோதனைகள் மேற்கொள்ளப்படும் என விஜே சிங்க தெரிவித்தார்.


அத்துடன் பண்டிகைக் காலத்தில் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்பவர்களி டம் தனியார் பேருந்துகள் அதிக கட்டணம் அறவிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## 26லட்சம் தீபங்களால்...



இணைந்து தீபங்களை ஏற்றும் பணிகளில் ஈடுபட்டனர்.

26 இலட்சம் தீபங்கள் ஏற்றப்பட்ட மையை தொடர்ந்து வண்ண ஒளி லேசர்களாலும் வாண வேடிக்கைகளாலும் சரயு நதிக்கரையின் வானம் ஒளிர்ந்தது.

இந்த நிகழ்வில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் பங்கேற்றார். அவர், “சிறீ இராம ஜென்ம பூமி யில் இராமர் முன்பு முதல் விளக்கை ஏற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. எதிர்க்கட்சியினருக்கு இராமர்மீது நம்பிக்கையில்லை. அவர்கள் இராம பக்தர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத் துவார்கள். அயோத்தியை இரத்தத்தில் நனைப்பார்கள். அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்கு காரணமே கடவுள்மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை தான். இது புதிய இந்தியாவின் சின்னம். இந்தியா ஒற்றுமையாக இருந்தால், உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் தீபத் திருநாளைக் கொண்டாடும் வாய்ப்பு நமக்கு தொடர்ந்து கிடைக்கும்”, என்று தனது உரையில் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு...

இதனால், ஆசிரியர்கள், மாணவர்கள் குழப்பமடைந்தனர்.

இது தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை தொடர்பு கொண்டு வினவியபோது “செவ்வாய்க் கிழமை (இன்று) வடக்கின் அனைத்து பாடசாலைகளும் வழமைபோல் இயங்கும்”, என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நெகிழி...

நெகிழி பைகளை ஒரு முறை மட்டுமே பயன்படுத்துவதை குறைக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் செலவை தவிர்க்கவும் நெகிழியால் ஏற்படும் மாசுபாட்டுக்கு எதிராக போராடவும் இந்த முயற்சி பங்களிக்கும் என்றும் நுகர்வோர் அதிகார ஆணையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வடக்கு, கிழக்கு...

நேற்று உருவான தாழமுக்கம் இன்றிரவு அல்லது நாளை மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தமிழ்நாட்டின் சென்னை அருகே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாழமுக்கம் நகரும்போது கிழக்கு, வடக்கு மாகாணங்களின் கடற்குதிகளை அண்மித்தே நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் மழை இன்று முதல் செறிவடைந்து 24 ஆம் திகதி வரை தொடரும்.

இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு அடுத்த சில நாட்களுக்கு மிகக் கனமழை கிடைக் கும் வாய்ப்புள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 24ஆம் திகதி வரை கிழக்கு, வடக்கு மற்றும் தென்கிழக்கு கடல் பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.

இதேவேளை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பரவலாக பருவ மழை கிடைக்கும். அத்துடன், எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் வங்காள விரிகுடாவில் மீண்டும் ஒரு தாழமுக்கமும் உருவாவதற்கான வாய்ப்பு உண்டு என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமது...

யாராவது சட்டவிரோதமாக பணம் மற்றும் சொத்துகளை ஈட்ட முற்பட்டால் அந்த முயற்சிகள் அனைத்தையும் இந்த சட்டத்தின் மூலம் முறியடிக்க முடியும் - என்றார்.

புதிதாக நிறுவப்பட்ட ஈட்டப்பட்ட சொத்துகள் தொடர்பான விசாரணை பிரிவு - எந்தவொரு முறையிலும் ஈட்டிய மூலதனங்கள் குறித்து விசாரணை நடத்த சட்டபூர்வமாக இந்தப் பிரிவுக்கு அதிகாரம் உள்ளதுடன், குற்றம் அல்லாத சொத்துகள் ஈட்டல் குறித்து சிவில் வழக்குகள் தாக்கல் செய்யும் சாத்தியக்கூறும் உள்ளது. பொது மக்களும் இந்தப் பிரிவில் நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க வாய்ப்புள்ளது. அத்துடன், சட்டபூர்வமற்ற முறையில் ஈட்டிய சொத்துகளை 30 நாட்களுக்குள் தடை செய்ய அல்லது கையகப்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 8இல்)

## ஐரோப்பா...

தயாரிக்கப்பட்டது”, என்றும் அவர் தனது வாக்குமூலத்தில் கூறினார் என்றும் தெரியவருகிறது.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கணேமுல்லை சஞ்சீவ என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். சட்டத்தரணிகள் போன்று வேடமிட்டு நீதிமன்றத்துக்குள் நுழைந்த இஷாரா செவ்வந்தி உட்பட இருவரே கணேமுல்லை சஞ்சீவ என்பவரை சுட்டுக்கொலை செய்தனர் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து, இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து கடந்த 14ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

இவருடன், சாவகச்சேரியை சேர்ந்த நந்தகுமார் தக்ஷி, அவரின் கூட்டாளி என்று கூறப்படும் 33 வயதான சுரேஷ், அல்லது கென்னடி, ஆள்கடத்தல்காரரான பளையை சேர்ந்த கே. சிவதாசன் அல்லது ஜே. கே. பாய், கம்பாஹா பபா எனப்படும் நிஷாந்த குமார ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு 90 நாட்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2029ஆம் ஆண்டுக்கு பின்னர் 159 எம். பிக்களுக்கு சிறை!

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 21

2029ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தியின் 159 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெலிக்கடை சிறையில் தனியானதொரு பிரிவை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை, அரசாங்கம் கையாளும் விதம் குறித்து அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக வழங்கப்படும் அரச நிதியை அரசியல் கட்சி நிதிக்காக சட்டபூர்வ நன்கொடையாக வழங்க முடியாது. அத்துடன், ஒருவரின் வேதனத்தை செலவிடுவதற்கும் அரச நிதியை தவறாக பயன்படுத்துவதற்கும் இடையே வேறுபாடு இருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட வருமானத்தை தாங்கள் விரும்பியபடி பயன்படுத்துவதற்கு சுதந்திரம் உள்ளது. எனினும், பணிமனைகள், எரிபொருள், தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து போன்ற கொடுப்பனவுகளை பொது நோக்கத்துக்காக மாத்திரமே செலவிட வேண்டும்.

வாடகை, மின்சாரம் அல்லது உபகரணங்கள் போன்ற பணிமனையை பராமரிப்பதற்கு வழங்கப்படும் நிதியை ஒரு கட்சியிடம் ஒப்படைக்க முடியாது. அவ்வாறு செய்வது அரச நிதியை தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமம். இது, நீதிமன்றத்தால் பிணையில் செல்வதற்கு அனுமதிக்க முடியாத குற்றமாகும் - என்றார். (ஐ)

# இரண்டு வாகனங்கள் மோதிய விபத்தில் சாரதி ஒருவர் காயம்

கொழும்பு, ஒக். 21

கண்டி - யாழ்ப்பாணம் (ஏ-9) வீதியில் அலவத்துகொட,வெலிகந்த சந்திக்கு அருகில் இரண்டு கப் ரக வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. அதிக வேகத்தில் பயணித்த கப் ரக வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மற்றொரு கப் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது கப் வாகனம் ஒன்றின் சாரதி காயமடைந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மாவட்டங்களுக்கு நிலச்சரிவு அபாயம்

கொழும்பு, ஒக். 21

நாட்டின் 9 மாவட்டங்களுக்கு நிலச்சரிவு அபாயம் உள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, கொழும்பு, காலி, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு நிலச்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாடு முழுவதும்...

வாழ்த்துகளை பரிமாறியும் இனிப்புகளை பகிர்ந்தும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தீபாவளி பண்டிகையையொட்டி நாடு முழுவதும் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றன. (ஐ)

## யானை...

பன்சேனை - வாதகல்மடு பகுதியில் தீபாவளி தினமான நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவேளை அங்கிருந்த நெல்லை உண்பதற்கு யானை முயன்றுள்ளது. அப்போது, அச்சமடைந்த பெண் அங்கிருந்து ஓடியபோது அவரை யானை தாக்கியுள்ளது. இதில், அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவர் 58 வயதான 4 பிள்ளைகளின் தாயாவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மத்துகமவில் செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்த பெண்ணுக்கு மறியல்!

கொழும்பு, ஒக். 21

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ‘கணேமுல்ல சஞ்சீவ’ படுகொலையின் சூத்திரதாரி இஷாரா செவ்வந்திக்குத் தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தார் எனக் கூறப்படும் களுத்துறை - மத்துகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பெண் உரிமையாளரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான வீட்டு உரிமையாளர் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இளம்...

முன்பகை காரணமாக அவர் வெட்டிக் கொல்லப்பட்டார் என்று பொலிஸாரின் முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மழையால்...

அநுராதபுரம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் நயன் சமரக்கோன் தெரிவித்தார்.

தாழ்நிலப் பகுதியில் வசிக்கும் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## முட்டை விலை குறைப்பு சாத்தியப்படாத ஒன்று!

கொழும்பு, ஒக். 21

அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், அண்மையில் முட்டை ஒன்றின் விலையை 10 ரூபாயினால் குறைக்க தீர்மானித்தது.

அதன்படி, வெள்ளை முட்டை ஒன்றின் விலை 18 ரூபாயாகவும், சிவப்பு முட்டை ஒன்றின் விலை 20 ரூபாயாகவும் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் நவோத் சம்பத் பண்டார தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள் அண்மையில் ஹெட்டிபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்திருந்தனர்.

இதனிடையே சந்தையில் 18 ரூபாய்க்கு முட்டைகள் கிடைப்பதில்லை என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை சந்தையில் முட்டை விற்கப்படுவதாக நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

நுகர்வோரின் குற்றச்சாட்டு தொடர்பில் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தை தொடர்பு கொண்டு வினவியபோது-

கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, ஒரு சிலர் திட்டமிட்ட நோக்கங்களுக்காக முட்டை விலை தொடர்பில் தீர்மானங்களை எடுத்துள்ளதாகவும் அனைத்து முட்டை உற்பத்தியாளர்களின் ஒருமித்த தீர்மானம் இல்லையெனவும் குறிப்பிட்டார்.

அதிகரித்த உற்பத்திச் செலவுகளை கருத்தில் கொண்டு முட்டை ஒன்றினை 18 ரூபாய்க்கு விற்க முடியாது என அவர் கூறினார்.

உற்பத்திச் செலவு அதிகமாகவுள்ளதால் 18 ரூபாய்க்கு முட்டை ஒன்றினை விற்கும்போது தாம் நட்டத்தை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், தாம் கடந்த சில மாதங்களாகவே நட்டத்திலேயே முட்டைகளை குறைந்த விலையில் விற்பனை செய்து வருவதாக அவர் கூறினார்.

இந்த விடயங்களில் அரசாங்கம் தலையிட்டு தமக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கிமிடத்து முட்டை விலைகளை குறைக்க வாய்ப்புள்ளதாக கூறிய அவர், உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் வரை முட்டை விலைகளை குறைக்க முடியாது என குறிப்பிட்டார்.

# மாகாண தேர்தல் தாமதம் ஆணைக்குழு பொறுப்பல்ல!

### ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க



கொழும்பு, ஒக். 21

**“தேர்தல் ஆணைக்குழு மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லையென்று ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு முன்வைக்கக் கூடாது. மாகாண சபைத் தேர்தல் இடம்பெறாமல் போனமைக்கு தேர்தல் ஆணைக்குழுவால் எந்தப் பொறுப்பையும் ஏற்க முடியாது” என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு முன்வைக்காமல், தாம் தம்மை நோக்கியே கைநீட்டிக் கொள்ள வேண்டும். இன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அதிக அக்கறையுடன் பேசும் தரப்பினரிடம், இதே அக்கறை அந்தக் காலப்பகு தியில் இருந் திருந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருந்தால், இந்நேரம் ஒருசில மாகாண சபைகளில் இன்னுமொரு தேர்தலும் வந்திருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எது எவ்வாறாக இருந்தாலும், தற் போதுள்ள நிலைமையில் கலப்புத் தேர்தல் முறைமையிலோ அல்லது விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை யிலோ அல்லது வேறு ஏதாவதொரு முறையிலோ மாகாணத் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் நாட்டில் இல்லை. குறிப்பாக மாகாண சபைத் தேர்தலில் மாத்திரமே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் ஆணையா ளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலொன்றை நடத்த முதல் சட்டமொன்று இருக்கவேண்டும். தேர்தல் ஆணைக்குழு என்பது சட் டத்தை அமுல்படுத்தும் நிறைவேற்றுப் பணிகளை முன்னெடுக்கும் நிறு வனமாகும். நிறைவேற்று கடமையை செய்வதற்கு உறுதியான சட்ட மொன்று இருக்கவேண்டும்.

2017 ஆம் ஆண்டு, 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டம் புதிதாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தினூடாக, அதுவரை நடைமுறையிலிருந்த விகிதாசார தேர்தல் முறை மைக்கு பதிலாக கலப்புத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட் டது. இந்த புதிய தேர்தல் முறைமைக்கமைய எல்லை நிர்ணய சிக்கலொன்று இருந்தது. அதாவது, அது தேர்தல் தொகுதிகளை பிரிப்பது தொடர்பான விவகாரமாகும்.

ஆணைக்குழு என்ற அடிப்படை யில், எல்லை நிர்ணய பணிகளை குறு கிய காலத்தில் நிவர்த்தி செய்து விடயத்துக்கு பொறுப்பான அமைச்ச ருக்கு ஒப்படைத்தேன். அதனை பாராளுமன்றத்தில் ஒப்படைத்து, பாராளுமன்றத்தில் அதனை நிறை வேற்றுவதற்கான பணிகள் பல மாத காலமாக இழுத்தடிக்கப்பட்டது. அதன் பின்னர் பாராளுமன்றத்தில் அப்போதிருந்த 225 பேரும் அதற்கெதிராக வாக்களித்து இந்த எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட் டது.

“பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமித்து, அந்தக் குழு வில் எடுக்கும் தீர்மானத்தை அறி வித்ததும் ஜனாதிபதி அந்தத் தீர்மா னத்தை வர்த்தமானியில் வெளியிட முடியும்” என்பது அந்தச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் நாட்டை ஆட்சி செய்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விடய பொறுப்பு அமைச்சர், சபாநாயகர், சபை முதல்வர்கள் உள்ளிட்ட தரப்பினர், பிரத மர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு என்பவற்றினாலேயே இது இல்லாமல் போயுள்ளது.

அதனால், தேர்தல் ஆணைக்குழு மாகாண சபைத் தேர்தலை நடத்த வில்லை என்று ஆணைக் குழு மீது குற்றச்சாட்டு முன்வைக்கக்கூடாது. தாம் தம்மை நோக்கியே கைநீட்டிக் கொள்ளவேண்டும். இன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அதிக அக்கறையுடன் பேசும் தரப்பினரிடம், இதே அக்கறை அந்தக் காலப் பகுதியில் இருந் திருந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருந்திருந் தால், இந்நேரம் ஒருசில மாகாண சபைகளில் இன்னுமொரு தேர்தலும் வந்திருக்கும். மாகாண சபைத் தேர்தல் இடம் பெறாமல் போனமைக்கு தேர்தல் ஆணைக்குழுவால் எந்த பொறுப்பையும் ஏற்க முடியாது. தேர்தலை திருடர்கள் எடுத்துச் சென் றார்களா அல்லது அவர்களின் தலையில் வைப்பதற்கு இடமளித்தார்களா? போன்ற காரணங்களை அப்போதி ருந்த தரப்பினர் சகல பொறுப்பை யும் ஏற்க வேண்டும். தற்போதுள்ள தேர்தல் ஆணைக்குழு அதனை பொறுப்பேற்கவும் முடியாது.

எனவே, மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கான சட்டத்தை தயார் செய்து தருமாறே நாங்கள் தொடர்ச்சியாகக்கோரி வருகிறோம். இன்றல்ல, அன்றிலிருந்து இதனைக் கோரி வருகிறோம். காலத்துக்கு காலம் எங்களின் தீர்மானங்கள் மாறு வதில்லை. எப்போதும் தேர்தல் ஆணைக்குழு, தேர்தலுக்கான முன் னிருந்து செயலாற்றும். தொடர்ந் தும் இந்த விடயங்களை கூறி வருகிறோம்- என்றார். (அ)

## குற்றக் குழுக்களுடன் பொலிஸார் தொடர்பு

### விசாரணக்கு சிறப்பு புலனாய்வு பிரிவுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கு திட்டம்

கொழும்பு, ஒக். 21

பொலிஸ்துறையில் பல்வேறு மட்டங்களில் உள்ள பல அதிகாரிகள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருப்பது தெரியவந்ததைத் தொடர்ந்து, இந்த அதிகாரிகளை விசாரிக்க பொலிஸ் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரங்களை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பொலிஸ் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் அதிகாரிகளின் உள் நடத்தை மற்றும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை நடத்தி வருகிறது.

இருப்பினும், தற்போது இந்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரிகள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததால் விசாரணைகள் தாமதமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்தப் பிரிவுக்குக் கூடுதல் அதிகாரிகளை நியமித்து, புலனாய்வு அமைப்புகளுடன் நேரடித் தொடர்பு கொள்ள அவர்களுக்குத் தேவையான அனுமதியை வழங்குவதற்கான திட்டங்கள் நடைபெற்ற வருகின்றன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் உறுப்பினர்களின் தொலைபேசி அழைப்புகளைக் கண்காணிக்கும் போது அவர்களுடன் பல பொலிஸ் அதிகாரிகள் தொடர்பிலிருந்ததாக தெரியவந்துள்ளது.

இருப்பினும், அந்த அதிகாரிகளில் சிலர் அவர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளவில்லை என்றும், மற்ற அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் உத்தரவுகளின் பேரில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த அதிகாரிகள் மீதான ஆரம்ப விசாரணைகளைச் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு நடத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையில் ஆண்களிடையே வாய்ப் புற்றுநோய் அதிகரிப்பு!

### சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக். 21

நாட்டில் ஆண்களே அதிக வாய்ப் புற்றுநோய்க்கு முகம் கொடுப்பதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க நியமிக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனை கூறினார்.

இலங்கை சுகாதாரத்துறையின் பல துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் வயது வந்தவர்கள் பல் நோய்களால் பாதிக்கப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் இந்த நிலைமைகளிலிருந்து குழந்தைகள் மற்றும் மக்களைப் பாதுகாக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதார கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்காக முன்கூட்டியே நோயைக் கண்டறியும் அவசியத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் ஆண்களிடையே வாய்ப் புற்றுநோய் பாரிய ஒரு பிரச்னையாக இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

## எரிபொருள் கொடுப்பனவை எங்களுக்கு வழங்கவேண்டாம்!

### பிரதமர் உட்பட 48 எம்.பிக்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 21

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உட்பட 48 பாராளுமன்ற உறுப்பினர்கள், தமக்காக பாராளுமன்றத்தால் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், பாராளுமன்ற உதவிப் பொதுச் செயலாளரும் தகவல் அதிகாரியுமான ஹன்ச அபேரத்ன இந்த விவரங்களை வழங்கியுள்ளார்.

அதன்படி, இந்த 48 பேரில், 13 பேர் கடந்த மார்ச் மாதம் முதல் தமது கொடுப்பனவை நிறுத்துமாறும் 16 பேர் ஏப்ரல் மாதம் முதல் நிறுத்துமாறும் கோரியுள்ளனர்.

மீதமுள்ளோர் மே, ஜூன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இருந்து எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தக் கோரியுள்ளனர்.

மேலும், அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர்களான இராமலிங்கம் சந்திரசேகர், வசந்த சமரசிங்க, அனில் ஜயந்த, தம்மிக பட்டபெந்தி, நாமல் கருணாரத்ன, மற்றும் உபாலி சமரசிங்க ஆகியோர் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலே தமக்கு எரிபொருள் கொடுப்பனவு தேவையில்லை என பாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு, மாதாந்த கொடுப்பனவுகளாக ரூ. 54,285, மாதாந்த வரவேற்பு கொடுப்பனவாக ரூ. 1,000, தொலைபேசிக் கொடுப்பனவாக ரூ. 50,000, போக்குவரத்துச் செலவுக் கொடுப்பனவாக ரூ. 15,000, அலுவலகக் கொடுப்பனவாக ரூ. 1,00,000 மற்றும் பாராளுமன்ற வருகை கொடுப்பனவாக ரூ. 2,500 வழங்கப்படுகின்றன.

இவற்றுடன், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான தூரத்தின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

அதேநேரம், தேசியப் பட்டியல் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 419.76 லீற்றர் டீசல் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org